ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1760/16 - 2012 මැයි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.05.31

*1760/16 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும் நகர அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருமாகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், கீழ்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணியானது நகர அபிவிருத்தி செயல்திட்டத்தினை நடாத்துவதற்கு உடனடியாக தேவைப்படுகின்றது எனக் கருதுவதனால், குறிப்பிட்ட காணியானது அப்படியான நோக்கத்திற்கு தேவைப்பாடாக உள்ளது என பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2012, மே 28.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலகம், கொழும்பு மாநகரசபை, அடிமைத்தீவு (Slave Island) வட்டார இல. 21 இல் அமைந்துள்ளதும், பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. பி. எம். சுனில் என்பவரால் 27.01.2012 இல் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 1916 இல் காணித்துண்டு இல. 8 எனக் காட்டப்பட்டுள்ள ஒரு (01) காணித்துண்டு. குறிப்பிட்ட காணித்துண்டின் மதிப்பீட்டு இலக்கம், விஸ்தீரணம் மற்றும் எல்லைகள் ஆவன:-

காணித்துண்டு இல. 8 - மதிப்பீட்டு இலக்கங்கள் தெரியாது,

விஸ்தீரணம்:- 01 ஏ. 00றூ. 04.35 பேர்ச். (0.4157 ஹெக்.)

வடக்கு : காணித்துண்டு இல. 5 ;

கிழக்கு : காணித்துண்டு இல. 7 மற்றும் 9 ;

தெற்கு : டொன் கரோலிஸ் மற்றும் புதல்வர்களது காணி;

மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 4 மற்றும் 5.

06-572